
Source: *Tamil Murasu*, p2
Date: 4 January 2017

அதிபர் ஆலோசனை மன்றத்துக்கு போஆட் மீண்டும் நியமனம்



அதிபர் ஆலோசனை மன்றத்துக்கு திரு போஆட் ஷேக் அபு பக்கர் மாத்தாரை (படம்) மீண்டும் நியமித்துள்ளார் அதிபர் டோனி டான் கெங் யாம். 68 வயது திரு போஆட், மன்றத்தின் உறுப்பினராக 2007ஆம் ஆண்டிலிருந்து இருந்து வருகிறார்.

ஜனவரி 2ஆம் தேதியிலிருந்து நான்கு ஆண்டுகளுக்கு திரு போஆட் அதிபர் ஆலோசனை மன்றத்தில் தொடர்ந்து அங்கம் வகிப்பார் என்று அதிபர் அலுவலகம் தெரிவித்தது.

அதிபர் ஆலோசனை மன்றத்தில் தற்போது சிங்கப்பூர் பங்குச் சந்தையின் முன்னாள் தலைவர் திரு ஜே.ஒய். பிள்ளை, முன்னாள் அமைச்சர் எஸ். தனபாலன், உச்ச நீதிமன்றத்தின் ஓய்வுபெற்ற நீதிபதி கோ ஜூன் செங், ஃபேர்பிரைஸ் நிறுவனத்தின் தலைவர் போபி சின், எஸ்பிளனேட் கலையரங்கத்தின் தலைவர் லீ சூ யாங் ஆகியோர் உறுப்பினர்களாகவும் கெப்பல் கார்ப் நிறுவனத்தின் முன்னாள் தலைவர் லிம் சீ ஓன், சிங்கப்பூர் ஏர்லைன்ஸ் நிறுவனத்தின் முன்னாள் தலைவர் ஸ்டீஃபன் லீ இருவரும் மாற்று உறுப்பினர்களாகவும் செயல்படுகின்றனர்.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.